සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

**பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) (14)**

විභාග අංකය
Index No / சுட்டெண் ......................................

**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

1. i. நாட்டின் அரசிறைக் கொள்கையை (Fiscal Policy) வழிநடத்த இலங்கை அரசாங்கத்தால் பயன்படுத்தப்படும் முக்கிய கருவிகள் (Policy Instruments) யாவை? (08 புள்ளிகள்)

   ii. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் அரச வருமானம் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு இல்லை என தெரிவித்திருந்தனர். அரசிறைக் கொள்கைக் கருவிகளை (Fiscal Policy Instruments) பயன்படுத்தி, அரச வருமானத்தை மேம்படுத்த அரசு செயல்பட வேண்டிய முறை குறித்த உங்கள் கருத்துக்களை வழங்குக. (12 புள்ளிகள்)

2. i. இலங்கையின் நாணயக் கொள்கையை (Monetary Policy) கையாளுவதற்கு பொறுப்பானர் யார்? (04 புள்ளிகள்)

   ii. ஒரு நாட்டின் நாணயக் கொள்கை (Monetary Policy) என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்கி. இலங்கையின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் முக்கிய கருவிகளை (Monetary Policy Instruments) சுருக்கமாக விவரிக்கவும். (16 புள்ளிகள்)

3. i. அரச கடன் (Public debt) என்பதன் பொருள் என்ன? (05 புள்ளிகள்)

   ii. அரச கடன் மறுசீரமைப்பு (Public debt Restructuring) என்பது பற்றி சுருக்கமாக விவரிக்கவும். (06 புள்ளிகள்)

   iii. இலங்கை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அரச கடன் மறுசீரமைப்பு செய்யக்கூடிய சாத்தியமான வழிமுறைகளை சுருக்கமாக விளக்குக. (09 புள்ளிகள்)

4. i. இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய ஆதாரமாக விளங்குவது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் அந்நிய செலாவணி நாட்டிற்குள் உட்பாய்ச்சப்பட்டாலும், இதன் மூலம் எதிர்மறையான சமூக தாக்கமும் ஏற்படுகின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் இலங்கை சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் தொடர்பான 5 காரணிகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   ii. மேற்குறிப்பிட்ட எதிர்மறை தாக்கத்தை குறைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை? விளக்குக. (10 புள்ளிகள்)

5. ஒரு அரசு அதன் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாதபோது, அந் நாட்டில் ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் பற்றி இலங்கை மீதான விசேட அவதானம் செலுத்தி விளக்குக. (20 புள்ளிகள்)

6. உலக வங்கியின் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் முதியோர் தொகை மொத்த சனத்தொகையில் 11.5% ஆகும். இந்த தரவுகளின்படி, இது வருடாந்தம் 2.05% அதிகரித்து வருகிறது. மேற்கூறிய தரவுகள் மீது குறிப்பாக கவனம் செலுத்தி, கொள்கை வகுப்பாளர் என்ற ரீதியில், வயதான மக்கள்தொகை தொடர்பான இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கையானது 2030 ஆம் ஆண்டளவில் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என்பதை விளக்குக. (20 புள்ளிகள்)

**************